# THIRUMARAI AASAAN


S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 39 September - 2019 Issue - 9


ஆசிரியர் உரை

## பரம தரிசனம்

**நாம்** ஓர் அறிவாளியைப் பார்த்து உங்களுடைய வாழ்க்கையின் முக்கியமான நாள் எதுவென்று கேட்டால், அவன் தன்னுடைய அறிவைக் கொண்டு சாதித்த ஏதாவது ஒரு நாளைக் குறித்துச் சொல்லுவான். அப்படியே ஒரு விஞ்ஞானியைக் கண்டு, உங்களுடைய வாழ்க்கையில் முக்கியமான நாள் எதுவென்று வினவினால், அவன் தன் ஞானத்தைக் கொண்டு, புதிதாக ஒன்றைக் கண்டுபிடித்த ஒரு நாளைக் குறித்துச் சொல்லுவான். இன்னும் ஒரு பெரிய வீரனைச் சந்தித்து, உங்களுடைய வாழ்க்கையின் முக்கியமான நாள் எதுவென்று விசாரித்தால், அவன் தான் உலகளவில் சாதனை செய்த ஏதாவது ஒரு நாளைக் குறித்துச் சொல்லுவான். இப்படியே நாம் ஒவ்வொருவராகக் கேட்டுக் கொண்டே போனால், அதற்கேற்ற பதில், விதவிதமாக நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

சரி, அறிவாளிக்கு அறிவாளியாகவும் (பிரசித்த பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேலின் பாதம் அமர்ந்து கல்வி கற்றுத் தேறியவன் அறிவாளிதானே) ஞானிக்கு ஞானியாகவும், (உலக ஞானம் தேவனுக்கு முன்பாக ஒன்றுமில்லை என்ற உண்மையை வெளிப்படுத்தியவன் ஞானியில்லையா?) வீரனுக்கு வீரனாகவும் (சாவு எனக்கு ஆதாயம் என்று தைரியமாய் உரைப்பவனை வீரன் என்று சொல்லுவது தவறா?) விளங்கும் அப்போஸ்தலன் பவுலைப் பார்த்து, ஐயா, பவுலடியாரே உங்களுடைய வாழ்க்கையில் முக்கியமான நாள் எதுவென்று கேட்டால், அவர் எந்த நாளைக் குறிப்பிடுவார் என்று நினைக்கிறீர்கள்? கண்டிப்பாகத் தான் ஒரு வெறியனாகத் தமஸ்கு செல்லும் வழியில், இரட்சகராகிய

**இயேசுவால் சந்திக்கப்பட்ட அந்த நாளையே,** தன்னுடைய வாழ்க்கையின் அதிமுக்கியமான நாள் என்று சந்தேகதிற்கிடமில் லாமல் சத்தமாகச் சொல்லுவான். இதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை.

அந்நாளில், **அவன் பிரயாணமாய் போய் தமஸ்கூவுக்குச் சமீபித்தபோது சடிதியிலே வானத்திலிருந்து ஓர் ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன் ஆண்டவரே நீ யார், என்றான். அதற்கு கர்த்தர், நீ துன்பப்ப டுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடின மாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்** (அப்.9:3-6).

இந்த தரிசனத்தைக் குறித்தே தான் ஒரு விசாரணைக் கைதியாக அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நிற்கையில், கொஞ்சம் விளக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டு, அகிரிப்பா ராஜாவே **நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை** என்று கூறுகிறார்.

தமஸ்கூவுக்குச் செல்லும் வழியில் அவன் கண்ட தரிசனம், அவன் மனதில் எப்பொழுதும் பசுமையாகவே இருந்திருக்க வேண்டும். ஏனெனில், இங்கே பவுலடியார் அகிரிப்பாவிற்கு முன்பாக நிற்கும்போது, தான் அழிக்கத் தேடின விசுவாசத்திற்காக பல ஆண்டுகள் வெற்றிகரமாக ஊழியம் செய்து முடித்து விட்டார். மூன்று சுவிசேஷப் பிரயாணங்களை மேற்கொண்டு நாடுகள் பல சுற்றியும் வந்து தன்னை அழைத்த கிறிஸ்துவுக்காக மிக அதிக மாகவே செய்து முடித்து விட்டார். ஆயினும், அந்த தரிசனத்தின் அனல் அவர் நெஞ்சை விட்டு நீங்கவில்லை. அதன் தாக்கம் மனதை விட்டு அகலவில்லை. வாய்ப்புக் கிடைத்த பொழு தெல்லாம் அதைக் குறித்துப் பேசிக் கொண்டேயிருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்தும், தான் எப்படி கிறிஸ்தவனாக மாறினேன் என்பது குறித்தும் அவருக்கு மிக உயர்ந்த எண்ணம் எப்பொழுதும் இருந்திருக்கிறதென்பதையே இதுகாட்டுகிறது. ஆகவே தான், அது குறித்துப் பெருமையாக எங்கு வேண்டுமானாலும், யாரிடத்தில் வேண்டுமானாலும் பேசிக்கொண்டே யிருந்திருக்கிறார்.

பொதுவாக தரிசனம் என்றாலே அது ஒரு காட்சிதான். பவுலடி யார், அகிரிப்பா ராஜாவிடம், தான் கண்ட தரிசனத்தைக் குறித்துச்

சொல்லும்போது அந்த தரிசனத்தில் என்ன காட்டப்பட்டது. அல்லது தான் என்ன கண்டேன் என்பதற்கு முக்கியத்துவம் தராமல், தனக்கு என்ன சொல்லப்பட்டது என்பதற்கே அதிக முக்கியத்துவம் தந்துள்ளார். நன்றாகக் கவனித்தால், அப்பொழுது அவருக்குக் கிடைத்த தனிப்பட்ட அனுபவங்களைக் குறித்து வாயே திறக்காமல், இயேசுவுடன் நடந்த உரையாடலுக்கே அவரின் வார்த்தைகளுக்கே அதிக முக்கியத்துவம் தந்துள்ளார். ஆம், தான் தரையில் விழுந்தது பற்றியோ, மற்றவர்கள் கைலாகு கொடுத்து அழைத்துச் சென்றது பற்றியோ, மூன்று நாள் புசியாமலும், குடியாமலும் இருந்தது பற்றியோ மனிதர் ஒன்றுமே பேசவில்லை. மாறாக, தான் யாரிடத்தில் பேசுகிறோம். அவருடைய ஆன்மீகத் தேவை என்ன அவருடைய இரட்சிப்புக்கு எது அவசியம் என்பதைத் தெரிந்து கொண்டு அவைகளுக்கே முக்கியத்வம் கொடுத்துப் பேசியுள்ளார். இது இன்றைய தரிசனக்காரர்களின் செயலுக்கு நேர் விரோதமாக இருக்கிறது. நான் சொல்வது சரிதானே.

இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிறது? அற்புதத்தின் காலமும், தரிசனத்தின் காலமும் முதல் நூற்றாண்டோடு முடிந்து போயிற்று. நிறைவான தேவனுடைய வாக்கியங்கள் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டபின் குறைவானவைகளாகிய இக்காரியங்கள் வெற்றிகரமாக முடிவுக்கு வந்துவிட்டது. (1கொரி 13:10) பங்கு பங்காகவும், வகை வகையாகவும் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நம்மோடு பேசிக் கொண்டிருக்கிறார் (எபி. 1:1,2). மேலும், சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து அதிலே நிலைத்திருக்கிறவனும், அதின்படி செய்கிறவனுமே பாக்கியவான் என்று யாக்கோபு ஆசிரியர் கூறியுள்ளார் (யாக். 1: 25). அது மாத்திரமல்ல பிரயோஜனமான எல்லாவற்றையும் மறைக்காமல் வெளிப்படுத்தியிருக்கிறார் என அப்போஸ்தலரில் காண்கிறோம். (அப்.20:20) அத்தோடு தன்னால் வெளிப்படுத்தினவைகளோடு ஒன்றையும் கூட்டவும் குறைக்கவும் கூடாது என்று எச்சரிக்கையும் கொடுத்துள்ளார் (வெளி 22:18) இவ்வளவு சரியாகவும், கறாராகவும் காரியங்களைச் செயல்படுத்தியுள்ள தேவன், இன்னும் ஏன் வெளிப்பாடுகளைக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும்? சிந்தியுங்கள்! மனிதர்களாகிய நம்மைப் போல சொல்ல வேண்டியவைகளை சொல்ல வேண்டிய சமயத்தில் சொல்லாமல், குறிப்பு பின் குறிப்பு என்று போடுகிறோமே அதைப்போல் அவரும் போட்டுக் கொண்டிருக்கிறாரா? நீங்கள் அப்படி நினைக் கிறீர்களா? அந்த ஞானமுள்ள சர்வவல்ல தேவனைப் பற்றி ஒருவனால் எப்படி இவ்வளவு குறைவாக எண்ண முடிகிறது? எனக்கு விளங்கவில்லை, சொல்லுங்கள்!

உண்மை நிலையை, வேத வசனங்கள் இப்படி வெளிச்சம் போட்டுக் காட்டும்போது, அந்த உ்ண்மைக்குச் செவி கொடுத்து அதை அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், எரேமியா காலத்து பொய்த் தீர்க்கதரிசிகளைப் போல தீர்க்கதரிசனம் என்ற பெயரில் எதை யெதையோ சொல்லித் திரிகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவ னுக்கு விரோதி என்றே எரேமியா சொல்லுகிறார். வசனத்தைக் கவ னியுங்கள். **இதோ தங்கள் நாவின் சொற்களையே வழங்கி அவர் அதை உரைத்தார் என்று சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு நான் விரோதி என்று கர்த்தர் சொல்லுகிறார்** (எரேமி.23:31).

சரி, நாம் நம்முடைய பகுதிக்கு வருவோம். அகிரிப்பாவிடம் அப்போஸ்தலன் பவுல் **...ராஜாவே நான் அந்தப் பரம தரிசனத்துக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை** என்று கூறுகிறார். அதாவது, அந்தப் பரமதரிசனத்துக்கு நான் உடனடியாகக் கீழ்ப்படிந்தேன் என்று சொன்னார். யார் இந்தப் பவுல்? இவரைப் பற்றி வேத வசனங்கள் நமக்குச் சொல்வதென்ன?

பிலிப்பியர் 3 ஆம் அதிகாரத்தின் 6ஆம் வசனத்தைக் கவனித்தால், பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் தன்னைப்பற் றிச் சொல்லும் போது **நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன்** என்று கூறுகிறான். அதாவது, மோசேயின் நியாயப் பிரமாணத்தின் காரியங்களை தான் அப்படியே கடைபிடிப்பவன் என்று. அப்படியானால், தனக்குக் கொடுக்கப் பட்டதில், தனக்கு போதிக்கப்பட்டதில் அவன் ஓர் உன்னத வாழ்க் கையை நடத்தியிருக்க வேண்டும். இருப்பினும் பவுல் **நான் அந்த பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படிந்தேன்** என்று சொல்லுகிறபடியால், அந்த தரிசனத்தில் அவன் எதையோ விசேஷமாக கண்டிருக்கிறான் என்பது நன்றாகவேத் தெரிகிறது. அந்த பரமதரி சனம் அவனுக்குச் சில உண்மைகளை எடுத்துச் சொல்லியிருக்கி றது என்றும் தோன்றுகிறது. ஆகவே தான் அவைகளுக்குக் கீழ்ப்ப டிந்துள்ளான்.

ஆகையால், தேவனுடைய மகத்தான ஊழியனாகிய பவுல், அந்த தரிசனத்தின் மூலம் எதையெல்லாம் கண்டுகொண்டான் என்பதைத் தெரிந்து கொள்வது நமக்குப் பிரயோஜனமாயிருக்கு மாதலால் அவை என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

**1. தன்னுடைய அறியாமையையும், தான் பாவியென்பதையும் கண்டு கொண்டான்:**

பவுலடியாரின் பரம தரிசனத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், மெத்தப்படித்த பவுல், மோசேயின் பிரமாணத்தின் படி நீதிமானாக வாழ்ந்த பவுல், தான் அறிய வேண்டியதை அறியாலிருக்கிறேன் என்பதைக் கண்டு கொண்டான் என்பது.

பொதுவாகவே படித்தவர்களுக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பு உண்டு. மற்றவர்களுக்கும் அவர்கள் அறிவு பெருத்தவர்கள், ஆகவே அவர்கள் செய்வதெல்லாம் சரியா யிருக்கும் என்று எண்ணத் தோன்றும். படித்தவர்களுக்கு எல்லாம் தெரியும் என்ற நினைப்பும் படித்தவர்கள் எப்பொழுதும் சரியாகவே செய்வார்கள் என்ற எண்ணமும் சரியாக இருக்குமானால், படிப் பாளியாகவும், நியாயப்பிரமாணத்தின்படி நீதிமானாகவும் வாழ்ந்த பவுல், பரம தரிசனத்துக்கு ஏன் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்? தனக்குத் தெரிந்தது தான் சரி என்றும், தன்னுடைய பக்திதான் நீதியானதும் என்றும் சொல்லி பரம தரிசனத்தை அலட்சியம் செய்திருக்கலாமே! அவர் அப்படிச் செய்யாமல் பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறார் என்று நமக்குத் திட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், நமக்கு ஓர் உண்மை இங்கே பட்ட வர்த்தனமாகத் தெரிகிறது. அது, தேவனுடைய திட்டத்தை சரியாகப் புரிந்து கொள்வதற்கு உலக அறிவு போதுமானதாக இல்லையென்பது.

பின்னாளில் அறிவுமிகுந்த பவுல் தனது அறியாமையை எங்ஙனம் ஒத்துக் கொள்ளுகிறார் என்று பாருங்கள். **முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிற வனுமாயிருந்தேன். அப்படியிருந்தும் நான் அறியாமல் அவிசுவா சத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்** என்று கூறுகிறான் [1தீமோ. 2:13] இன்னும், தான் பாவியென்பதையும் அவர் எப்படி எடுத்துரைக்கிறார் பாருங்கள். **பாவிகளை இரட் சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. அவர்களில் பிரதான பாவி நான்** என்று கூறுகிறார்.

ஆகையால் அருமையானவர்களே! நாம் ஒவ்வொருவரும் நம்முடைய ஞானத்தின்படி எல்லாம் அறிந்தவர்களென்ற நினைப்பையும், நமக்குத் தெரிந்தவைகளின்படி நான் நீதிமான், பக்திமான் என்ற நினைப்பையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அப்போஸ்தலன் பவுல் போல் இயேசுவானவர் எனக்கு என்ன சொல்லியிருக்கிறார், என்னிடத்தில் இப்பொழுது என்ன எதிர் பார்க்கிறார், நான் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன என்று பார்த்து, அதின்படி செய்யத் தயாராக வேண்டும். எவ்விதத்திலும் குறைவில்லாமல் வாழ்ந்த பவுலடியாரே, தன் அறியாமையை உணர்ந்து தான் பாவியென்பதை ஒத்துக் கொண்டு அவருக்கு தன்னை உடனடியாக ஒப்புக் கொடுத்திருக்கும்போது, நாம் எவ் வளவு சீக்கிரம் அதைச் செய்ய வேண்டுமென்பதை எண்ணிப் பார்த்து செய்ய வேண்டியதை சீக்கிரம் செய்வோம்.

## *II*. தனக்குப் போதித்தவர்கள் தவறு என்பதைக் கண்டு கொண்டான்.

பவுலடியாரின் பரம தரிசனத்தின் மூலம் நாம் கற்றுக் கொள்ளுகின்ற இரண்டாம் பாடம், அவன் தனக்கு போதித்தவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுகொண்டான் என்பது.

கமாலியேல் அந்நாளில் புகழ்பெற்ற ஒரு நியாயசாஸ்திரி. இவன் மகாகீர்த்தி பெற்ற வேத சாஸ்திரியாகிய இல்லேல் என்பவனுடைய பேரன். தங்களுடைய ஞானத்திற்கு மூன்று தலைமுறையாகப் பெயர்பெற்ற குடும்ப. இப்படிப்பட்டவன் பாதம் அமர்ந்து பாடம் கற்பது அந்நாளில் அவ்வளவு சுலபமாய் கிடைக்கும் ஒரு சிலாக்கியமல்ல. ஆனாலும், அந்த பாக்கியம் நம்முடைய பவுலுக்குக் கிடைத்தது. தனக்குக் கிடைத்த சிலாக்கியம் பற்றி பவுலடியாரே என்ன சொல்லுகிறார் என்று கவனியுங்கள். நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்திலே பிறந்து இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோகளுடை வேத பிரமாணத்தின் படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டேன் என்று [ அப்.22:3].

புகழ்பெற்ற ஓர் ஆசானாலே மிகத் திட்டமாகப் போதிக்கப்பட்ட பவுல், ஏன், அந்த பரம தரிசனத்துக்குக் கீழ்ப்படிந்தார்? என்ன காரணம்? சிந்தியுங்கள். தனக்குப் போதித்தவர்கள் தவறு செய்திருக்கிறார்கள் என்பதை அன்றைய தினம் அவன் கண்டு கொண்டான். ஆகவே தான் கீழ்ப்படிந்துள்ளான்.

ஆம், உபாகமம் 18 ஆம் அதிகாரம் வசனம் 15 ல் உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல் ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவி கொடுப்பீர்களாக என்றும், இன்னுமட் 18,19 ஆம் வசனங்களில் ... என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். **நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார், என் நாமத்தினாலே அவர் சொல்லும் வார்த்தைகளுக்குச் செவி கொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன்** என்ற போதனைகள் இந்தக் கெட்டிக்கார ஆசானாலே தனக்குக் கற்பிக்கப்படவில்லையே என்பதை அவன் அந்நாளில் கண்டு கொண்டான்.

இதை வாசிக்கும் அருமையானவர்களே! நாம் நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டுமென்பது புரிகிறதா? எங்க பாதர், எங்க ரெவரெண்ட், எங்க பாஸ்டர், எங்க பிரதர் நன்றாகப் பிரசங்கம் பண்ணுவார். எல்லா வசனங்களையும் அப்படியே எடுத்துச் சொல்வார் என்று மனிதர்களுக்கு மாமரியாதை

கொடுத்து அவர்களுக்குப் பின்னால் செம்மறியாட்டுக் கூட்டங்கள் போல் அநேகர் சென்று கொண்டிருக்கிறார்கள். இன்னும் பலர், எங்களுக்குப் போதிக்க வேண்டிய அனைத்தும் போதிக்கப் பட்டிருக்கிறது. இனி எதுவும் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்று தலைக்கனத்தோடு சொல்லிக் கொள்கிறார்கள். தயவு செய்து இங்கே கவனியுங்கள். அறிவு பெருத்த கமாலியேலே போதிக்க வேண்டியவைகளைப் போதிக்கத் தவறியிருக்கும் போது, நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படியே குற்றச் சாட்டப்படாதவன் என்று மார்தட்டிக் கொண்ட பவுலடியாரே. தான் கற்க வேண்டியவைகளைக் கற்றுக் கொள்ளாமல் இருந்திருக்கும் போது நமக்குப் போதிக்கிறவர் களின் தகுதியும், நம்முடைய நிலையும் எம்மாத்திரம் என்று தயவு செய்து எண்ணிப் பாருங்கள்!

இவருக்குச் செவிகொடுங்கள் என்று (மத். 17:5) மறு ரூப மலைக் காட்சியின் போது, மேகத்திலிருந்து வந்த சத்தம் சொல்லுகிற படியால், நாம் எந்த ஒரு மனிதனுக்கும், மனிதர்களுடைய உபதேசங்களுக்கும் செவி கொடுக்காமல் இயேசுவால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு உபதேசங்களுக்கு மாத்திரம் செவி கொடுத்து அதன்படி வாழ்வோம்.

### III பாரம்பரியம் தகர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதைக் கண்டு கொண்டான்.

பவுலடியாரின் பரம தரிசனத்தின் மூலம் நமக்குக் கிடைக்கின்ற இன்னுமொரு பாடம், முன்னோர்களுடைய பாரம்பரியம் தகர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை அவன் அத்தரிசனத்தின் மூலம் கண்டு கொண்டான் என்பது.

அப்போஸ்தலன் பவுல், தான் இயேசுவால் சந்திக்கப்பட்டு மன மாற்றமடைந்து குறித்துப் பின்னாளில் புத்தியில்லாத கலாத்தியருக்குச் சொல்லும் போது அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்த போது உடனே நான் மாம்சத்தோடும், இரத்தத்தோடும் யோசனை பண்ணாமல் அதற்குக் கீழ்ப்படிந்தேன் என்று கூறுகிறார். (கலா.1:16) அதாவது, இதுதான் இரட்சிப்புக்கான தேவத்திட்டம், இதுதான் கிறிஸ்துவின் உபதேசம் என்று சொல்லப்பட்ட போது அவன் தனது முன்னோர்கள் பற்றியோ, தன் தகுதி பற்றியோ கவலைப்படாமல், தனக்கு போதிக்கப்பட்டவைகளுக்குத் தன்னை ஒப்புக்கொடுத்துள்ளான்.

பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் பவுலடியார், தனக்கு லாபமாயிருந்தவைகள் எவையென்று பெருமையோடு ஒரு பட்டியல் கொடுக்கிறார். அதில், தன்னை நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன் என்று மார்தட்டிச் சொல்லுகிறார். இந்த பரிசேயர்கள் யார் என்பதற்கு அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக உத்தரவு சொல்லும் போது, அதற்கு விளக்கமும் கொடுக்கிறார். நம்முடைய மார்க்கத்திலுள்ள சமய

பேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயத்துக்கு இசைந்த படி பரிசேயன் என்று [அப்.26:5] மோசேயின் பிரமாணத்திலுள்ளவைகளை அட்சரம் பிசகாமல் கடைப்பிடிப்பவர்கள் தான் பரிசேயர்கள். அத்தோடு முன்னோர்களுடைய பாரம்பரியத்தைக் கடைபிடிப்பதிலும் மிகத் தீவிரமானவர்கள். இதினிமித்தம் நமதாண்டவர் இவர்களை அடிக்கடி கடுமையாகச் சாடியிருக்கிறார் [ மத்.5:3,9 மாற்கு 7:13] பாரம்பரியம் என்பது. முன்னோர்களிடமிருந்து தலைமுறை தலைமுறையாகப் பெறப்படும் நடைமுறைக் கோட்பாடுகள். அவை தேவ வெளிப்பாட்டினால் பெறப்படுபவை அல்ல. அவைகளைக்கடைபிடிக்க வேண்டுமென்று வேத போதனை எதுவுமில்லை. ஆயினும், அவைகளுக்கு மோசேயின் பிரமாணத்திற்கு இணையான முக்கித்துவம் கொடுக்கப்பட்டு மதிக்கப்பட்டு மோசேயின் பிரமாணம் **வரிவேதம்** என்றும், வாய்வழியாகப் பெறப்பட்ட பாரம்பரியங்கள் **ஒலிவேதம்** என்றும் அவர்களால் அழைக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட பலமான பாரம்பரியத்தை மீறுவது ஒரு பரிசேயனுக்கு இலேசான காரியமல்ல. ஆயினும், இயேசுவானவர் அவனுக்கு வெளிப்படுத்திச் சொன்ன காரியங்களினிமித்தமாக எந்தத் தாமதமும் செய்யாமல் பாரம்பரியங்களைத் தகர்த்தெறிந்து ஊழியக்காரனாகிய அனனனியாவின் ஆலோசனைப்படி பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். [ அப். 22:16] இப்படிச் செய்ய வேண்டுமென்பதை பவுல் அந்த பரம தரிசனத்தின் மூலம் கண்டு கொண்டான்.

அருமையானவர்களே! பரிசுத்த வேதாகமத்துக்குச் சம்பந்தமில்லாத பாரம்பரியக் காரியங்களைக் கடைப்பிடிப்பதில் நம்முடைய நிலை எப்படியிருக்கிறது? பாரம்பரியத்தைக் கடைப்பிடிப்பது தவறு என்றும், அது தகர்க்கப்பட வேண்டிய ஒன்று என்றும், பவுல் அந்த தரிசனத்தின் போதும், அதைத் தொடர்ந்து சொல்லப்பட்ட வார்த்தைகளின் மூலமும் கண்டு கொண்டது உங்களுக்கு விளங்குகிறதா? அப்படியானால், நாம் ஏன் இன்னும் பாரம்பரியத்தை உடும்புப் பிடியாய்ப் பிடித்து தேவக்கட்டளையை அவமதிக்க வேண்டும்? அதனடிப்படையில், நரகத்திற்குப் பாத்திரராக மாற வேண்டும்? சிந்தியுங்கள்! பாரம்பரியம் மட்டுமல்ல, தேவனுக்கு விரோதமான காரியங்கள் எதுவாக இருந்தாலும் அவைகளுக்கு ஒரு முடிவு கட்டுவோம். அப்போஸ்தலன் பவுல் இயேசுவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தது போல நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிவோம். பவுல் பரமதரிசனத்தின் மூலம் கண்டு கொண்டவைகளை நாமும் நம்முடைய வாழ்வில் கண்டு, பவுலைப் போல் பரம கானானுக்குப் பங்காளியாக மாறுவோம். ஆமென். ★

# மன்னிப்பு

Bro. J.C. சோட்

தொடர்ச்சி...

**பாவங்கள் மன்னிக்கப்படுகிறதினால் நம் கடன் தீர்க்கப்படுகிறது**

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மாதிரி ஜெபத்தில், எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் (மத்தேயு 6:12) என்று போதித்தார். அடுத்ததாக, மத்தேயு 18:27-32 வசனப்பகுதியில், கடன்பட்டிருந்த வேலைக்காரன் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாததினால் எஜமானுடைய இரக்கத்திற்காகக் கெஞ்சிய போது, அந்தக் கடனை எஜமான் மன்னித்து விட்டான் என்று பார்க்கிறோம். அதே நேரத்தில் மன்னிப்புப் பெற்று அந்த வேலைக்காரன் புறப்பட்டுப் போகையில் தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன்பட்டிருந்தவனாகிய தன் உடன் வேலைக் காரனாகிய ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து தொண்டையை நெரித்து, நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்க வேண்டும் என்றான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு மிகவும் துக்கப்பட்டு ஆண்டவரிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது அவனுடைய எஜமான் அவனை அழைப்பித்து, பொல்லாத ஊழியக்காரனே நீ என்னை வேண்டிக் கொண்டபடியினால், அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினது போல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமோ என்று சொல்லி அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான் (மத்தேயு 18:27-32). அது போலவே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மீது விழுந்த எல்லாக் கடன்களையும் தீர்த்து நாம் விடுதலை பெற வழி ஏற்படுத்தினார். இது எவ்வளவு அருமையானது என்று எண்ணிப் பாருங்கள்! காரியங்கள் இப்படியிருக்கிறபடியால் நம்மைச் சுற்றிலும் இருக்கிறவர்களிடத்தில் நாம் இரக்கம் காட்டி அவர்களை மன்னிக்க வேண்டும்.

**நம் கிரியைகளினாலே அல்ல தேவனுடைய கிருபையினாலே தான் மன்னிப்புக் கிடைக்கிறது.**

இதன் பொருள், நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள நமக்குத் திராணி இல்லை என்பதாகும். நம்முடைய இரட்சிப்பை நானே சம்பாதித்துக் கொள்ள நம்மால் எந்தக் கிரியையும் செய்ய முடியாது. கர்த்தர் நமக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றையும் நாம் செய்து முடித்த பிறகும் கூட, நாம் இரட்சிக்கப்பட தேவனுடைய கிருபை அவசியமாயிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தை களைக் கவனியுங்கள். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல [எபேசியர் 2:8,9]. நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால் பக்தியில்லாதவனும், பாவியும் எங்கே நிற்பான்? [1பேதுரு 4:18] நாம் இரட்சிக்கப்படுவதற்குத் தகுதியில்லாதிருந்தும் கூட நம்மை நாமே இரட்சித்துக் கொள்ளுவதற்கு ஏதாவது செய்யத் திராணியில்லாதிருந்தும் கூட, தம்முடைய கிருபையினாலும், இரக்கத்தினாலும் நம்மை இரட்சித்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். தேவனுடைய மகாப்பெரிய கிருபையினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம். அதினிமித்தம் நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையும் நமக்கு உண்டாயிருக்கிறது.

**மன்னிக்கப்படுவது என்பதன் பொருள்**

நாம் சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம். நாம் கழுவப்பட்டிருக்கி றோம். அதாவது நாம் புதிய சிருஷ்டிகளாயிருக்கிறோம். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக, நாம் பாவங்களுக்கு மரித்து, கிறிஸ்துவுக்குள்ளாக அடக்கம் பண்ணப்பட்டு, புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படி எழுந்திக்கிறோம். [ரோமர் 6:3-6]. சவுலுக்கு, நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்று பாவங்கள் போகக் கழுவப்படு என்று சொல்லப்பட்டது [அப்.22:16]. நம் இரட்சகர் இயேசு கிறிஸ்துவும், அவருடைய ராஜ்யமாகிய சபையில் நாம் பிரவேசிக்க மறுபடியும் பிறக்க வேண்டும். அதினிமித்தம் புருசிருஷ்டிகளாக மாற முடியுமென்று சொல்லுகிறார் [யோவான் 3:3-5] எனவே, நம் பாவங்கள் மன்னிக்கப்படும்போது, பழையவைகள் எல்லாம் ஒழிந்து போவ தோடு எல்லாம் புதிதாகிறது [II கொரி.5:17].

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதா? சிலர், நாங்கள் நல்லவர்கள். ஆகவே, எங்களுக்குப் பாவமன்னிப்பு அவசியமில்லை என்கின்றனர். ஆனால், இது முற்றிலும் தவறான சிந்தையாகும். இன்னும் சிலர் தங்கள் பாவங்களைத் தேவன்

ஒருபோதும் மன்னிக்கவே மாட்டார். ஏனென்றால், தங்களது பாவம் அவ்வளவு கொடிதானது என்று நினைக்கிறார்கள். இதுவும் ஓர் தவறான எண்ணமாகும். உங்களுக்குப் பாவமன்னிப்பு வேண்டுமானால் அதை நிச்சயம் பெற்றுக் கொள்ள முடியும். உங்கள் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு அது ஒன்றுமில்லாமல் எடுத்துப்போடப்படும். இது கிறிஸ்துவுக்கு நீங்கள் கீழ்ப்படிவதின் மூலம் சாத்தியமாகும். இது ஓர் எளிமையான காரியமாக இருக்கிறது. எப்படியெனில், அவர் நம்மிடமிருந்து கொஞ்சமாகத்தான் கேட்கிறார். ஆனால், அவர் கொடுக்கும்போது அதிகமாகத் தருகிறார். ஆகவே, அவரிடம் வந்து மன்னிப்பின் சந்தோஷத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். இது நிச்சயமாகவே உங்கள் வாழ்வில் என்றென்றும் புத்துணர்வைக் கொடுக்கும். ★

## மகத்தான நியாயத்தீர்ப்பின் நாள்

- அந்நாள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு நாள் (எபி.9:27)
- அந்நாளில் அனைவரும் நியாயத்தீர்ப்பில் இருப்பார்கள் (ரோமர். 14:12)
- அந்நாளில் வசனத்தின் மூலம் தேவன் நியாயந்தீர்ப்பார் (யோவான் 12:48)
- அந்நாளில் கிரியைகளினடிப்படையில் அனைவரும் நியாயந்தீர்க்கப்படுவர் ( மத் 12:35-37)
- அந்நாளில் கர்த்தர் பட்சபாதமுடையவராயிருக்கமாட்டார் (ரோமர் 2:11)
- அந்நாளிலான நியாயத்தீர்ப்பு இறுதியானது ( மாற்கு
- அந்நாளில் துன்மார்க்கருக்கு ஆக்கினையும், நீதி மான்களுக்கு நித்திய ஜீவனும் உண்டு. (மத்.25:46).

பெண்கள் பகுதி

# வாயினால் ஏற்படும் சிதைவுகள்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகள் அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாதமும் நாம் அனைவரும் கர்த்தருடைய வார்த்தையிலிருந்து பிரயோஜனமான பாடங்களைக் கற்றுக் கொள்வோம். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நாம் அனைவரும் தேவனுடைய மகிமைக்காகத் தான் வாழ வேண்டும். நாம் அவருக்குச் சொந்தமானவர்கள். அவருடைய சாயலிலே படைக்கப்பட்டிருக்கிறோம். நம் அவயங்கள் மூலம் தேவனை மகிமைப்படுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

சாலமோன் ஞானி நீதிமொழிகளில் சொல்லும் போது, மதியற்ற ஸ்திரீ வாயாடியும், ஒன்றுமறியாத நிர்மூடமுமாயிருக்கிறாள் [நீதி:9:13] என்று கூறுகிறார். ஒன்றுமறியாதவர்களாயும், மதிப்பிழந்தவர்களாகவும் வாழ யாருக்குத்தான் விருப்பமிருக்கும்? பெண்கள் வளர வளர ஒரு மதிப்புள்ள, பிறரால் போற்றப்படும் பண்புள்ளவர்களாய் இருக்கத்தான் விரும்புவோம். நம்முடைய செயல்பாடுகள் நம்மை யார் என்று உலகிற்குக் காட்டும். பொதுவான இடங்களில் சத்தத்தோடு மூர்க்கத்தனமாகப் பேசுதல், காரணமில்லாமல் சிரித்தல், நகைத்தல் போன்றவைகளை யார் ஒருவர் செய்தாலும் சுலபமாக தன்னை ஒரு முட்டாள் என்று அடையாளப்படுத்தி விட முடியும். சிந்தனைகள் செயல்பட வைக்கிறது. செயல்கள் நம்முடைய குணத்தை நிர்ணயிக்கிறது. மீண்டும் சாலமோன் இவ்விதமாகக் கூறுகிறார். சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற் போகாது தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான் [நீதி:10:19] என்று. முடிவில்லாத உரையாடல் ஒழுக்கமான ஒன்றாக இருக்காது. அதிகமாக பேசிக் கொண்டிருப்பவர்கள் சீக்கிரத்தில் ஒரு பிரச்சனையில் சிக்கிக் கொள்வார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு ஆலோசனையாகக் கூறும் போது, நாங்கள் உங்களுக்கு கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலை செய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம் [*I*தெசலோ: 4:12]. என்கிறார். அமைதலுள்ளவர்களாயிருக்கும் படி நாம் கற்றுக் கொள்வது அவசியம். நல்ல எண்ணமும், சுய கட்டுப்பாடும் அமைதலாய் இருப்பதற்கு உதவுகிறது. பிறர்

காரியத்தில் தேவையில்லாமல் தலையிடுவதைக் தவிர்த்து நம் வேலையில் அதிக கவனம் செலுத்துவதே சிறந்த வழி. சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியே தேவனுடைய பார்வையில் அதிகம் விலையேறப் பெற்றது [*I Pet* 3:4] என்ற உண்மையை வளரும் இளம்பிள்ளைகள் அறிந்து அதில் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சாந்தம் என்ற குணம் அநேகரால் அநேக சமயங்களில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. சாந்தகுணம் என்றால் ஒன்றும் தெரியாதவர்கள், கையாலாகாதவர்கள், கால்மிதி என்று பொருள் அல்ல. குதிரைக்கு சேணம் கட்டுவது ஏதோ அதற்குப் பெலன் குன்றியிருப்பதற்காக அல்ல. மாறாக அதிக பாரமான வைகளைக் கூட சிரமமில்லாமல் சுமந்து செல்வதற்குத் தான். இது போன்று தான் சாந்தம் என்பதும்.

மேலும், யாக்கோபு ஆசிரியர் கூறுகையில், பாருங்கள், குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம் போட்டு, அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம் என்கிறார். மேலும், 3:7- ல் அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவை களைப் பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக் கொளுத்தி விடுகிறது.

சகல விதமான மிருகங்கள், பறவைகள், ஊரும் பிராணிகள், நீர் வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம் மனுஷ சுபா வத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது. அது அடங்காத பொல்லாங் குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. [5,6,8].

அப்படியானால் நாவை அடக்கவே முடியாதா? இங்கே யாக் கோபு ஆசிரியர் சொல்லுவதென்னவென்றால், ஒருவன் மற்றொருவன் வாயை அடக்க முடியாது. ஆனால், கட்டாயமாக தன் வாயைக் கட்டுப்படுத்த ஒருவனால் முடியும். இது கொஞ்சம் கடினமான விஷயமாக இருந்தாலும், கிறிஸ்தவர்கள் தங்கள் சொந்த சரீரத்திலுள்ள அவயவயங்களைக் கட்டுப்படுத்த முடியும். [கொலோ 3:5-11] [*II* பேதுரு 1:5-8].

அருமையானவர்களே வேத வசன ஆதாரத்தோடு காரியங் களைப் பார்த்தோம்.

தேவன் படைத்த அவயவயங்களை தீய வழியில் பயன் படுத்தாமல், அவருடைய நாம மகிமைக்காகப் பயன்படுத்துவோம். ஆமென். ★

வாலிபர் பகுதி

# வழி விலகிப் போகிறீர்களா?

Dr. ஏபில் நாயகம்

இயேசு கிறிஸ்துவை அவருடைய உபதேசத்தின்படி ஏற்றுக் கொண்ட அனைவருமே இப்பொழுது தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் **உண்மை கிறிஸ்தவர்களின்** எண்ணிக்கை மிக அதிகமாக இருந்திருக்கும். ஆனால், உண்மை நிலவரம் என்ன? சொற்ப எண்ணிக்கையில் தான் **உண்மையான கிறிஸ்தவர் களைக்** காண முடிகிறது. அதற்கு காரணம்? ஏற்றுக்கொண்ட விசு வாசத்திலிருந்து வழி விலகி பலர் பின்வாங்கிப் போய்விடுகிறார் கள். **உண்மை கிறிஸ்தவர்கள்** என்பதை ஏன் வலியுறுத்துகிறேன் என்றால் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அனைவரையும் நாம் **உண்மை கிறிஸ்தவர்கள்** என்று கருதிவிட முடியாது. யார் கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்று ஆவிக்குரிய கனிகளைக் கொடுத்து, விசுவாசத்தில் முதிர்ச்சியை அடைய முயற்சி செய்து முன்னேறிச் செல்கிறார்களோ, அவர்களே **உண்மை கிறிஸ்தவர்கள்.** கிறிஸ்துவ குடும்பத்திலே பிறந்துவிட்டதாலேயே ஒருவரால் **உண்மை கிறிஸ்தவன்** என்ற நிலையை அடைய முடியாது. ஆனால், அப்படி நினைப்பவர்கள் தான் இன்று அதிகம்.

எபிரேயர் 2:1 ல் வழி விலகி போவதற்கு எதிரான ஓர் எச்சரிக் கையை வாசிக்க முடியும். **ஆகையால், நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடிக்கு அவைகளை மிகுந்த ஜாக்கிரதையாய் கவ னிக்க வேண்டும்.** இது ஒரு பொதுவான எச்சரிக்கை. யார் வேண்டு மானாலும் வழி விலகிப் போக முடியும். அதற்கு யாரும் விதி விலக்கு அல்ல. நான் வழி விலகிப் போக மாட்டேன் என்றோ, வழி விலகிப் போக என்னால் முடியாது என்றோ, ஒருவராலும் சொல்ல முடியாது. ஏனென்றால், யார் வேண்டுமானாலும் வழி விலகிப் போக முடியும். நம் பார்வைக்கு ஒருவர் சிறந்த விசுவாசியாக இருக்கலாம். ஆனால், அவர் வழி விலகிப் போக வாய்ப்புண்டு. இன்னும் விசுவாசத்தின் ஆரம்ப நிலையில் இருப்பவர்களும் வழி விலகிப் போக முடியும். எனவே, யார் வேண்டுமானாலும் நிலை தடுமாற முடியும்.

வழி விலகிப் போவதற்கு ஒரு முக்கியமான காரியம் உண்டு. பலர் வழி விலக அது தான் காரணம். ஆம், **தாங்கள் பின் வாங்கி சென்று கொண்டிருக்கிறோம் என்பது** உணரப்படாமலேயே

அது கொஞ்சம் கொஞ்சமாக நடக்கிறது. பிறகு வெகு தூரம் வழி விலகிச் சென்றதற்கு பின்னரே அதை அவர்களால் உணர முடிகிறது. கடலிலே மிதக்கும் ஒரு பொருளைப் போல, கொஞ்சம் கொஞ்சமாக அலைகளினாலே உள்வாங்கப்பட்டு, ஒரு கட்டத்திலே மீண்டும் கரையை நோக்கி வர முடியாத தூரம் வரைக்கும் அப்படிப்பட்டவர்கள் சென்று விடுகிறார்கள். ஆனால், அந்த நிலை வரைக்கும் அந்த பொருள் இருப்பது என்னவோ கடலில் தான். அதைப்போல அவர்களும் விசு வாசத்தில் இருப்பது போல ஒரு மாயமான தோற்றம் இருக்கும். ஆனால், கரையிலிருந்து வெகு தூரம் சென்று விடுகிறார்கள்.

எபிரெயர் 2:1-4 வரை வாசித்தால், கேட்டவைகளை விட்டு விலகினால் தண்டனையிலிருந்து எப்படித் தப்புவோம் என்ற கேள்வி கேட்கப்படுகிறது. அப்படியென்றால், வழி விலகி செல்பவர்களும் பின் வாங்கிப் போகிறவர்களும் நிச்சயம் தண்டனையை அடைவார்கள். எனவே, கிறிஸ்தவராய் இருக்கின்ற ஒவ்வொருவரும் நாம் வழி விலகிப் போகிறோமா? அல்லது பின் வாங்கிப் போகிறோமா? என்ற கேள்வியோடு எப்பொழுதும் இருக்க வேண்டும். யாருமே தண்டனையைப் பெற விரும்புவதில்லை. அப்படியென்றால், பின் வாங்குதலுக்கான சில அறிகுறிகளை நாம் தெரிந்து கொள்வது அவசியம். அதற்கு பின், அந்த அறிகுறிகள் நம் வாழ்வில் உள்ளதா என்று சுயபரிசோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த சுய பரிசோதனையை இந்த இதழை வாசிப்பதனால் இம்மாதம் மட்டும் செய்யாமல், ஒவ்வொரு நாளும் அதைச் செய்ய பழக வேண்டும்.

வேத வசனங்களை வாசிப்பதும், அவைகளைத் தியானிப்பதும் கிறிஸ்தவர்களுக்கு மிகவும் அவசியம். சங் 1:1-4 வரை வாசித்தால் யார் பாக்கியவான் என்று அறிய முடியும். யார் ஒருவர் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும், பகலும் அதிலே தியானமாயிருக்கிறவனே பாக்கியவன என்று வாசிக்கிறோம். வசனம் 4-ல் , இப்படி செய்யதவர்கள் துன்மார்க்கர் என்று அழைக்கப்படுகிறார்கள். ஏற்கனவே சொல்லப்பட்டது போல உண்மை கிறிஸ்தவன் ஆவியின் கனிகளை வெளிப்படுத்த வேண்டும். சங் 1-3ல், வேதத்தை தியானிப் பவர்களே நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரத்தைப் போல கனி கொடுப்பார்கள்: எப்பொழுது ஒரு கிறிஸ்தவன் வேத வாசிப்பையும் வசனங்களை தியானிப்பதையும் அற்பமாக எண்ணுகிறானோ, அப்பொழுதேஅவர் வழி விலகவும், பின் வாங்கவும் ஆரம்பித்து விட்டார். ஏனென்றால், அப்படிப்பட்டவர்கள் கனி கொடுக்க மாட்டார்கள். கனி கொடாத மரம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும் [லூக்கா: 3:9].

அடுத்து, ஜெபம் ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கையிலும் அடிப்படையான ஒரு காரியம். தேவனும் மனிதனும் உறவாடும் நேரம் ஜெபமாகும். நம் தேவனோடே தொடர்பு கொள்ளவும். அவரோடு ஓர் ஐக்கியமான உறவில் இருக்கவும் ஜெபம் மிகவும் அவசியம். ஜெபம் அல்லாமல் தேவனோடே உறவாட, அவரோடே ஓர் உறவை அமைத்துக் கொள்ள வேறு வழி ஏதும் இல்லை. தன் சொந்தது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே, ஜெபத்தின் வாயிலாகத்தான் பிதாவோடு தொடர்பு கொண்டு பேசினார். அப்படியென்றால் ஜெபம் இல்லாமல் எப்படி ஒரு கிறிஸ்தவர் இருக்க முடியும். இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் [தெசலோ.5:17] என்று பவுல் தெசலோனிக்கே சபைக்கு அறிவுறுத்துகிறார். அப்படியானால், ஜெபம் ஒரு வெற்றியுள்ள முன்னேற்றமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவசியம். ஜெபம் இல்லாத வாழ்க்கை – பின் வாங்குதலுக்கான முக்கிய அறிகுறியாகும்.

மேலும், விசுவாசத்தில் நமக்கு சகோதரர்களாயிருக்கிறவர்களிடம் நாம் ஐக்கியமாயிருக்க வேண்டும். ஒரு சபையில் நாம் அங்கமாயிருகும் பொழுது நம் சபை மக்களோடு ஐக்கியமும் அந்நியோந்நியமுமாய் இருக்க வேண்டியது அவசியம். அதற்கு தேவையான ஒரு காரியம் சபை கூடிவருதலை நாம் விரும்ப வேண்டும். தவறாமல் சபை கூடி வருதல் அதற்கு வழி வகுக்கும். சகோதரர்களுக்குள்ளே, சகோதரிகளுக்குளே ஒவ்வொரு நாளும் [எபி:3:13] ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக் கொண்டு, ஒருவரை யொருவர் தேற்றி, ஊக்கப்படுத்துவது ஒரு சபையாக நாம் வளரவும், தனிப்பட்ட முறையிலே வளரவும் உதவும். ரோமர் 14:19–ல், ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நிந்யோநிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம் என்று வாசிக்கிறோம். எனவே, நாம் வழிவிலகி போகிறோமா, இல்லையா என்பதற்கு நாம் தேவனுடைய பிள்ளைகளோடே வைத்திருக்கிற உறவும், அதற்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவமும் ஒரு அறிகுறியாகும்.

இப்படிப்பட்ட அறிகுறிகள் நம் வாழ்க்கையின் எல்லாக் கட்டங்களிலும் ஏற்பட வாய்ப்புள்ளது. குறிப்பாக, வாலிபப் பருவத்திலே தேவனுடைய காரியங்களை பின்னுக்குத் தள்ளி உலக காரியங்களுக்கு முதலிடம் கொடுத்து அவவைகளில் சிக்குண்டு பின் வாங்கிப் போகிறவர்கள் அநேகராய் இருக்கிறார்கள். நாம் பெற்றுக் கொண்ட இரட்சிப்பை இறுதி வரைக்கும் பத்திரப்படுத்திக் கொள்வது அவசியம். நண்பர்கள் மத்தியில் பெயர் கிடைக்க வேண்டும்.

அவர்களைப் பிரியப்படுத்த வேண்டும் என்று தேவ காரியங்களை பின்னுக்குத தள்ளுவது நம்மை நிச்சயம் வழிவிலகச் செய்துவிடும். கொலோசெயர் 2:6 ல் வாசிப்பது போல, நாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட படியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாக..... விசுவாசத்தில் உறுதிப்பட்டு.... அதிலே பெருக வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் வேர் கொண்டிருந்தால் நாம் அசைக்கப்படுவதில்லை. நாம் பின் வாங்கிப் போக முடியாது. எனவே, நம் ஆத்தும நங்கூரமான தேவனை நோக்கி முன்னேறிச் செல்வோம். பின்வாங்குதல் நமக்குரியதல்ல. ஆமென். ★

## இயேசு கிறிஸ்து

- **இயேசு கிறிஸ்து** ஆதியில் தேவனோடிருந்தார் (யோவான் 1:1)
- **இயேசு கிறிஸ்து** எல்லாவற்றையும் படைத்தவராயிருக்கிறார் (கொலே.16,17)
- **இயேசு கிறிஸ்து** தேவ வல்லமையினால் கன்னி மரியாளிடத்தில் பிறந்தார் (மத்.1:20,21)
- **இயேசு கிறிஸ்து** தேவனுடைய குமாரன் (பிலி.2:3-8)
- **இயேசு கிறிஸ்து** தேவனுடைய குமாரன் என்பதை நிரூபிக்க அற்புதங்கள் செய்தார் (யோவான் 20:30,31)
- **இயேசு கிறிஸ்து** அவரில் விசுவாசம் வைப்பவர்களுக்கு இரட்சிப்பைத் தருகிறார் (I கொரி. 15:1-4)
- **இயேசு கிறிஸ்து** இரட்சிக்கப்படுகிறவர்களை சபையில் சேர்க்கிறார் (அப். 2:47)
- **இயேசு கிறிஸ்து** அந்த மகத்தான சபையின் தலையாயிருக்கிறார் (எபே.5:23,25)




# கவனித்துக் கேட்பது

Dr. பிரெய்ஸி

**ஹ**லோ, குட்டீஸ் எப்படி இருக்கீங்க? தேவனுடைய கிருபையால் நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். அத்தோடு திருமறை ஆசான் மாத இதழை தவறாமல் வாசித்து வருகிறீர்கள் எனவும் நம்புகிறேன்.

கடந்த மாதம் நமக்கு நல்ல **நட்புகள், தொடர்புகள்** அவசியம் என்று படித்தோம். இந்த மாதம் தேவனுடைய வார்த்தைகளை எப்படிக் கவனித்து, அதை வாழ்வில் நடைமுறைப் படுத்துவதென்று பார்க்கப் போகிறோம்.

அன்பு குழந்தைகளே! வேத வசனங்களை வெறுமனே படிப்பதும், பேசக் கேட்பதும் மட்டும் போதுமானதல்ல. அதைப் புரிந்து நமது அன்றாட வாழ்வில் கடைபிடிப்பது மிகவும் முக்கியம்.

மத்தேயு[13:1-9] வசனங்களை முதலில் வாசியுங்கள். அங்கே இயேசு தம்முடைய சீஷர்களுக்கு தேவனுடைய வார்த்தையைக் கேட்கிறவிதம் குறித்து விளக்கியுள்ளார்.

அந்த வேதபகுதியை வாசித்து முடித்திருப்பீர்கள் என நினைக்கிறேன். அதிலுள்ளதை ஓரளவு புரிந்தும் இருப்பிர்கள். இப்பொழுது, மத்தேயும் 13:18-23 வசனப் பகுதியையும் வாசியுங்கள்.

அருமைச் செல்வங்களே! மத்தேயு 13:23 -ல் காண்பது போல், நாம், நல்ல நிலத்தில் விழுந்த விதை எப்படிக் கனி கொடுத்ததோ அதுபோன்று, தேவ வசனத்தைக் கவனித்துக் கேட்டு அதை உணருகிறவர்களாயிருந்து அதன் மூலம் நம் வாழ்வில் தேவனுக் காகக் கனி கொடுக்கிறவர்களாக இருக்க வேண்டும். வேத வச னத்தை வெறுமனே வாசித்து, கேட்டு அதை நம் வாழ்வில் உணரா தவர்களாக இருந்தால், பொல்லாங்கன் வந்து நம்முடைய இருத யத்தில் விதைக்கப்பட்ட விதையை எடுத்துப் போடுவான். அது வழியருகே விதைக்கப்பட்டு , ஆகாயத்துப் பறவைகளால் பட்சித் துப் போடப்பட்டது போலாகிவிடும் [13:18].

கற்பாறையிலும், முள்புதரிலும், விதைக்கப்பட்ட விதையைப் போல, நாம் வசனத்தைக் கேட்கிற விதம் இருந்து விடக் கூடாது. ஏனென்றால், அங்கே வேர்கொள்ள முடியாமலும், நெருக்கமும் இருக்கிறபடியால், ஆவிக்குரிய சிந்தை அற்றுப் போய் உலகக் கவலையும், உபத்திரமும் வரும் போது கனி கொடுக்க முடியாமல் போகும். [13:22].

ஆகையால் குழந்தைகளே! நீங்கள் படிக்கும் , கேட்கும் ஒவ்வொரு வசனத்தையும் புரிந்து கொள்ளுங்கள். அப்படிப் புரிந்து கொள்ள முடியாவில்லையென்றால், பெற்றோரிடமோ, சபையில் உள்ள அக்கா, அண்ணன்களிடமோ கேளுங்கள். ஞாயிறு பள்ளி ஆசிரியர்களிடம் கேட்கலாம். தேவ வார்த்தை மிகவும் முக்கியம்.

ஆகவே, வேதாகமத்தைத் தினமும் வாசியுங்கள், அதைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு வாசியுங்கள். தேவசித்தத்தை அறிந்து கொள்ளுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

*அன்புடன், Dr. பிரெய்ஸி அக்கா.* ★

## சிறுவர்களுக்கான வேத வினா (மத்.13:1-23)

1. இயேசு இந்த உவமையைச் சொன்ன போது எங்கே உட்கார்ந்திருந்தார்?

2. இயேசு யாருக்கு இந்த உவமையைச் சொன்னார்?

3. வழியருகே விழுந்த விதைகளை எது பட்சித்துப் போட்டது?

4. நாம் வசனத்தைக் கேட்டு உணராத போது யார் நம்முடைய இருதயத்திலிருந்து விதைகளைப் பறித்துக் கொண்டு போவான்?

5. தேவனுடைய வார்த்தையைக் கேட்டு உணரும் போது என்ன நடக்கிறது?

**சரியான பதில் எழுதியவர்களில் சிலர்**

| | | |
|---|---|---|
| சாமுவேல் | – | காங்கயம் |
| ரோஸ்லின் ஜெசிந்தா | – | காங்கயம் |
| சகாய புஷ்பராஜ் | – | மணப்பாறை |
| ராகுல் | – | காங்கயம் |
| ஜோஸ்வா ரோஷன் | – | காங்கயம் |
| ஜாஸ்பர் பிரின்ஸ் | – | காங்கயம் |
| கிங்ஸ்லி ரூபஸ் | – | காங்கயம் |
| ஜஸ்டின் | – | காங்கயம் |
| தினகரன் | – | காங்கயம் |
| B. பெனிட்டா டென்னி சாரன் | – | காங்கயம் |
| S. ஸ்டெஃபி ஏஸ்லின் | – | பல்லடம் |
| S. ஹெவன்லின் | – | திருப்பத்தூர் |
| ஷைனி | – | திருப்பூர் |
| ஸ்டைலி | – | திருப்பூர் |
| ஷோபியா | – | திருப்பூர் |
| ஜாய்ஸ் | – | திருப்பூர் |
| அகஸ்டின் | – | திருப்பூர் |
| ஜெர்சி | – | திருப்பூர் |

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு...

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை அக்டோபர் மாத இதழில்)**

**I இராஜாக்களின் புத்தகத்தில் தேடிக் கண்டுபிடியுங்கள் ( 21 - 22 அதிகாரங்கள்)**

1) நாபேத்துக்கு எங்கே திராட்சத்தோட்டம் இருந்தது?

2) யேசபேல் யாருடைய பெயரால் நிரூபங்களை எழுதினாள்?

3) சீரியருக்கும் இஸ்ரவேலருக்கும் எத்தனை வருஷம் யுத்தமில்லாமலிருந்து?

4) யார் இந்த யோசபாத்?

5) இஸ்ரவேலின் ராஜா எத்தனை தீர்க்கதரிசிகளை கூடிவரச் செய்தான்?

6) சிதேக்கியா என்பவன் யார்?

7) ஆகாப்பின் குமாரன் பெயர் என்ன?

8) யோசபாத் ராஜாவாகிற போது எத்தனை வயதுடைய வனாயிருந்தேன்

9) யோசபாத் எங்கே கப்பல்களைச் செய்தான்?

10) நேபாத்தின் குமாரன் யாருடைய வழியிலே நடந்தான்?

## ஆகஸ்ட் மாத வினாக்களுக்கான விடைகள்

1. மூன்று வருடங்கள் (15:2)
2. ரெகொபெயாமுக்கும், பெரொபெயாமுக்கும் (15:6)
3. அபியாமின் குமாரன் (15:8)
4. சிம்ரி, திர்சாவிலே (16:15)
5. எலியா (17:6)
6. யேசபேல் (16: 30,31)
7. நானூற்றைம்பது பேர் (18:22)
8. கேரீத் அந்தண்டையிலே ( 17:5)
9. சீரியாவின் ராஜா (20:1)
10. ஒரு சூரைச்செடியின் கீழ் (19:5)

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | |
|---|---|
| செல்வம் | - வெள்ளலூர் |
| ஜமுனா சேகர் | - திருப்பூர் |
| புனோராசம்மா | - திருப்பத்தூர் |
| ஜெயராஜ் | - கோவை |
| செவ்வமணி குணசேகரன் | - சென்னை |
| அருள்ராஜன் | - சென்னை |
| தங்கத்தாய் | - பொங்கலூர் |
| பாக்கியம் சம்பூரணம் | - ஈரோடு |
| சுசீலா | - மூலனூர் |
| ஸ்வேதா | - பவானி |
| ஹேமாவதி | - பவானி |
| ஈஸ்வரி இம்மானுவேல் | - பவானி |
| ஹரிஷ் | - பவானி |
| ஜெயமணி ஜெயபாண்டியன் | - கடலூர் |
| தரணிக்குமார் | - திருப்பூர் |
| தனம் பேன்ஸி | - தியாக துருகம் |
| காணிக்கை | - திருச்சி |
| ரபேக்காள் ஜேசுராஜ் | - மணப்பாறை |
| ருபவல்யா | - நாசரேத் |
| மாணிக்கவாசகம் | - திருச்சி |
| இந்திரா ஜெபக்கனி | - நாசரேத் |
| சாமுவேல் மோகன்தாஸ் | - சென்னை |
| சாந்தகுமாரி | - நாதரேத் |
| மீனாட்சி | - திருப்பூர் |
| செல்சியா பெர்னிஷ் | - திருப்பூர் |
| மேசியா பிரிசில்லா | - திருப்பூர் |
| சைமன் | - சென்னிமலை |
| ஜெனிபர் சுரேஷ் | - கேத்தி பாலாடா |
| ரோஷினி | - பவானி |
| சங்கீதா | - அவிநாசிபாளையம் |
| ராமசந்திரன் | - காங்கயம் |
| வசந்தா செல்வராஜ் | - கள்ளக்குறிச்சி |
| ஜான்சி | - ஆனைமலை |
| பால்ராஜ் | - ஆனைமலை |
| இளவரசி | - காங்கயம் |
| பீட்டர் தாமஸ் | - திருவண்ணாமலை |
| ரவிச்சந்திரன் | - சென்னை |

# ஒத்திவைப்பு என்னும் பாவம்

பென்னி மார்டின்

பிரியமான திருமறை ஆசான் வாசகர்களே! நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். உங்கள் யாவரையும் மீண்டுமாக இக்கட்டுரையின் வாயிலாக சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். அருமையானவர்களே, நம்முடைய வாழ்க்கையில் பல சந்தர்பங்களில் நாம் செய்ய வேணடிய காரியங்களை நாளை நாளை என்று ஒத்தி வைக்கிறோம். பிறகு, நாளை என்பது நமக்குக் கிடைக்காமலேயே போய்விடுகிறது. அந்த காரியங்களை நாம் செய்யாமலேயே நேரத்தைக் கழித்துவிடுகிறோம் அல்லது வருடங்கள் உருண்டோடி விடுகின்றன. இப்படியாக நாம் செய்ய நினைத்த காரியங்களை ஒத்தி வைப்பதனால் பின்பு வாய்ப்பு கிடைக்காமலே போய் நம் வாழ்க்கையில் கை நழுவிப்போன காரியங்கள் பலபல. அன்பானவர்களே! நாளை என்பது நம்முடைய கைகளில் இல்லை. காலங்களைத் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் தேவனுடைய கைகளில் தான் இருக்கிறது( யாக்கோபு 4:14). எனவே தான், நாம் காலத்தின் அருமையை உணர்ந்தவர்களாக அதை பிரயோஜனப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று தேவனால் எச்சரிக்கப்படுகிறோம் ( எபேசியர் 5:16). சிலரை நாம் பார்க்கும் போது இவ்வுலகத்திற்குரிய வேலைகளை ஒத்தி வைக்காமல் சரியான நேரத்தில் செய்து முடிப்பார்கள். ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும் போது ஒத்தி வைப்பில் ஈடுபடுவதை நாம் பார்க்கிறோம்.

இப்படிப்படடவர்களுக்கு ஆவிக்குரிய சிந்தை என்பது துளி கூட இருக்கது. மாறாக, மாம்ச சிந்தையால் நிரப்பப்பட்டவர்களாய் இருப்பார்கள். ஆனால், ஒத்தி வைப்பில் உள்ள மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால், நாம் உலகத்திற்குரிய காரியங்களை ஒத்தி வைப்பதினால் தற்காலிகமாக நமக்கு இழப்பு ஏற்படும். ஆனால், ஆவிக்குரிய காரியங்களில் நாம் ஒத்தி வைப்பில் ஈடுபட்டால் அது நமக்கு நித்திய பதிப்பை ஏற்படுத்தும். அதற்காக நாம் மிகப் பெரிய விலையை கொடுக்க வேண்டியதாயிருக்கும். வேதாகமத்தில் இதற்கு மிகச் சிறந்த உதாரணம் தேசாதிபதியாக துருசில்லாளுடனே வந்து பவுலை அழைப்பித்து கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக் கேட்டான். பவுல் நீதியையும், இச்சையடக்கத்தையும், இனி வரும் நியாயத் தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து; இப்பொழுது நீ போகலாம் எனக்குச் சமயமான போது உன்னை அழைப்பிப்பேன் என்றான் (அப். 24:24,25).

வேறுவிதமாகச் சொன்னால் பேலிக்ஸ் மனந்திரும்பி தேவனுடைய காரியங்களில் ஈடுபட வாய்ப்பு வந்த போது அதை உத்தி வைத்தான், அதற்குப் பின்பு மறுபடியும் அந்த வாய்ப்பு அவனுக்கு வரவே இல்லை. அதன் பிறகு சில காலத்திற்குள் ளேயே அவன் சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டான், இது நமக்கு கர்த்ருடைய காரியங்களில் ஒத்தி வைப்பு கிறிஸ்தவ வாழ்க்கையில் எப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று காட்டுகிறது.

**ஒத்திவைத்தல் பிசாசின் மாபெரும் ஆயுதமாகும்**

தேவன் மோசேயை தம்முடைய ஜனங்களை வழிநடத்துபடி அழைத்த போது, அவர் பல சாக்குபோக்குகளைக் சொல்லி தப்பித்துக் கொள்ள முயற்சித்தான். தேவன் அவைகள் ஏற்றுக் கொள்ளாமல் தம் ஜனங்களை வழிநடத்த வைத்தார் என்பதை நாம் அறிந்திருந்தாலும், இதை நாம் அப்படியே சபையில் பொருத்திப் பார்க்க முடியும். சபையில் சுவிசேஷத்தை பிறருக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அங்கத்தினர்கள் அப்படிச் செய்யாம லிருப்பதற்குச் சொல்லும் சாக்குபோக்குகள் ஒத்தி வைக்கும் செயல்காளாகத் தான் இருக்கின்றன. சாத்தான் ஒத்தி வைத் தலை தன் ஆயுதமாக எடுத்துப் பயன்படுத்தி நம் ஆவிக்குரிய வாழ்வில் பெருத்த சேதத்தை ஏற்படுத்தி விடுகிறான். அவன் சிறி யோர் முதல் பெரியோர் வரை அதாவது நம் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் ஒத்தி வைத்தலைப் புகுத்தி விடுகிறான்.

உதாரணமாக: 12 வயது சிறுவன் கர்த்தருடைய காரியங்களில் ஈடுபடாமலிருக்க அதை ஒத்திவைக்க நான் தேவனைப் பற்றி சிந்திக்க மிகவும் சிறியவனாயிருக்கிறேன் என்பான். 25 வயதில் வாலிபன் என் வாழ்க்கை உலகப்பிரகாரமான காரியங்களில் பரபரப்பாக இருக்கிறபடியால் தேவனைப் பற்றி சிந்திக்க எனக்கு நேரமில்லை என்பான்.

இப்படி எல்லா வயதினரும் தேவனுக்கடுத்த காரியங் களில் ஈடுபடாமலிருக்க அவர்கள் மத்தியில் சாத்தான் ஒத்தி வைத்தலைப் புகுத்தி விடுகிறான். பிரியமானவர்களே, சிலர் இப் பூமிக்குரிய வாழ்க்கை சம்மந்தமான காரியங்கள் என்று வரும் போது அதை ஒத்திவைக்காமல் சரியான நேரத்தில் செய்து முடிப்பர். உதாரணமாக, வேலைக்கு சரியான நேரத்தில் செல்வார்கள். பள்ளிக்குப் பிள்ளைகளைப் சரியான நேரத்திற்குக் அனுப்புவார்கள், குடும்ப நிகழ்ச்சிகளில் ஒன்றைக் கூட விட்டு விடாமல் எல்லாவற்றிலும் பங்கேற்பார்கள். ஆனால், ஆவிக்குரிய காரியங்கள் என்று வரும் போது அதை இப்போதே செய்யா விட்டால் என்ன? நாளை நாளை என்று ஒத்தி வைப்பில் ஈடு பட்டு கடைசி வரை அதைச் செய்து முடிக்காமலேயே காலத்தைக் கழித்து விடுகிறார்கள்.

**ஒத்திவைத்தலை மேற்கொள்ள ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட வேண்டும்.**

அன்பானவர்களே தேவனுடைய காரியங்களை நாம் ஒத்தி வைத்து பிறகு செய்யலாம் என்று நினைத்து முடியாமல் போவதால் இவ்வுலகத்திலும் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. அதைவிட மேலாக வரவிருக்கும் உலகில் நாம் நித்திய ஜீவனை இழந்து போவோம். அது நமக்கு எவ்வளவு பெரிய பாதிப்பு! எவ்வளவு பெரிய இழப்பு! சரி, இதிலிருந்து நாம் எப்படி விடுபட முடியும்? நிச்சயமாக வழி உண்டு, நாம் ஆவிக்குரிய சிந்தைகளுடையவர்களாயிருந்து, ஆவிக்குரிய காரியங்களில் ஈடுபட வேண்டும். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம் என்று (ரோமர் 8:6) ல் நாம் வாசிக்கிறோம். இப்படி ஆவிக்குரிய போஷாக்கு அவசியப்படுகிறது. அனுதினமும் நாம் பல்வேறுப் பட்ட முடிவுகளை எடுக்கிறோம். அப்படி முடிவெடுப்பதில் நம்மை வழிநடத்த தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய போஷாக்கு நமக்கு அவசியமாகிறது. அதே போல் நாம் அனுதினமும் பலவிதமான சவால்களை, சோதனைகளை எதிர் கொள்கிறோம். அவைகளுக்கு எதிராக எதிர்நீச்சல் போட நாம் பெலனற்றுப் போகும் போது உலகத்தாரிடம் திரும்புகிறோம். அவர்கள் நம்மிடம் இருக்கின்ற கொஞ்ச பெலனும் அற்றுப் போகிற அளவுக்குச் செய்து விடுகிறார்கள். இவ்வுலகத்தின் தத்துவஞானிகள், பொன் மொழிகள் போன்றவைகள் எவ் விதத்திலும் நமக்கு ஆறுதலைத் தரவே தராது. மாசும், கலப் படமும் நிறைந்த இவ்வுலகில் ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிற தேவனுடைய வார்த்தை மட்டுமே மாசற்ற கலப்படமற்ற ஒன்றாக இருக்கிறது. அவைகளை நாம் ஏராளமாக தாராளமாக உட்கொள்ளும் போது அது கசப்பான நம் வாழ்வை இனிப் பாக்குகிறது. இப்பூமிக்குரிய ஆகாரத்தை நாம் தொடர்ச்சியாக உட்கொண்டு எவ்வித உடற்பயிற்சியும் செய்யாதிருந்தால் அது நம் உடலில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். அதே போல் நாம் ஆவிக்குரிய போஷக்கை தொடர்ச்சியாக உட்கொண்டு விட்டு நம் வாழ்க்கையில் தேவனுக்குப் பிரியமாக அதை அப்பியாசப்படுத்தவில்லையென்றால், அது நம் ஆவிக்குரிய வாழ்வில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! நம் வாழ்க்கை கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிற படியால் (யாக்கோபு 4:14) வாழ்கின்ற கொஞ்ச நாட் களில் தேவனுக்குப் பிரியமாக வாழ்ந்து, தேவனுடை அளவற்ற ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்வோம். நாம் தேவனுடைய காரி யங்களை ஒத்தி வைத்தால் தேவன் நமக்குத் தருகிற ஆசீர்வாதங் களை ஒத்தி வைத்துவிடுவார். எனவே, ஒத்தி வைத்தல் என்னும் பாவத்தில் விழுந்துவிடாத படிக்கு நம்மை நாம் காத்துக் கொள் வோம். ★

# பத்துக் கட்டளைகளைப் பற்றி என்ன?

*ரசல் பெல்*

**ப**த்துக் கட்டளைகளை உள்ளடக்கிய பழைய ஏற்பாட்டின் கீழ் நாம் இல்லையென்றால், அந்தப் பத்துக் கட்டளைகளும் நமக்குப் பொருந்தாது என்று பொருள்படுமா? இதுதான் இன்று நம்மில் எழுகிற பொதுவான கேள்வியாக இருக்கிறது. இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் இதற்கான பதில் ஆம். பொருந்தாது என்பதுதான்.

இதன் பொருள், நாம் கொலை செய்யலாமா, களவு செய்யலாமா, விபச்சாரம் செய்யலாமா? நிச்சயமாகக் கூடாது என்பதுதான் பதில். பத்துக் கட்டளைகளில் ஒன்றாகிய ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்னும் கட்டளையைத் தவிர, மற்ற எல்லாக் கட்டளைகளும் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கிறது. அதனால் தான், கிறிஸ்தவர்கள் ஓய்வுநாளாகிய சனிக்கிழமையில் தேவனை ஆராதிப்பதில்லை. அதற்குப் பதிலாக இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளாகிய, வாரத்தின் முதல் நாளிலே ஆராதிக்கிறார்கள்.

ஆம், நாம் ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டுமென்ற கட்டளை புதிய ஏற்பாட்டில் இல்லை. ஆனால், மற்ற ஒன்பது கட்டளைகளும் இன்றும் நமக்குப் பொருந்துகிறதாகவே இருக்கிறது. அதாவது, இந்த ஒன்பது கட்டளைகளும் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. ஆகையால், இவற்றைக் கடைபிடிப்பதில் தவறொன்றுமில்லை. இது இன்றைய மனிதனுக்குத் தேவையாயிருக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 7:4 –ல் சொல்லும் வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். **அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்.** வேறுவிதமாகச் சொன்னால், கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, பழைய ஏற்பாட்டுப் பிரமாணம் (பத்துக் கட்டளைகள் உட்பட) எல்லாம் எடுத்துப் போடப்பட்டுவிட்டது. **இப்பொழுதோ,**

**நாம் பழமையான எழுத்தின் படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ் செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப் பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.** (ரோமர் 7:6). கிறிஸ்து எந்தப் பிரமாணத்திலிருந்து நம்மை விடுவித்தாரோ அதை நீங்கள் இன்னும் பின்பற்ற வேண்டுமா? நிச்சயமாகப் பதில் வேண்டாம் என்பதுதான். அதினால்தான் நாம் இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டைப் பின்பற்றுகிறோம்.

எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்களே தானே. ஏனெனில், நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது. அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும், கற்பலகைகளில்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது. எழுத்துக்களினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச் செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்தார்களே. ஒழிந்து போகிற மகிமையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்? ஆக்கினைத் தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக் கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள் வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின் மேல் இருக்கிறதே. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம். கர்த்தரே ஆவியானவர் கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம் (II கொரி. 3:2,3,7-9,15-18). ☆

# நீயோ தேவனுடைய மனுஷனே!

Bro K. **பாண்டியன்**

**வே**தம் சிலகாரியங்களை விளக்கிச் சொல்லிய பின் **நீயோ** என்று குறிப்பிடுவது பல இடங்களில் பயன்படுத்தப்படுகிற ஒரு வார்த்தையாக இருக்கிறது. காரணம், நாம் தேவனால் இவ்வுலகத்தினின்று தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். ஆண்டவர் இயேசு தம்மைப் பின்பற்றுகிறவர்களைப் பார்த்து நீங்கள் விசேஷித்தவர்கள் என்று வலியுறுத்துவதையும் நாம் பார்க்கிறோம். ஆகவே, தேவனுடைய பிள்ளைகள், விசுவாசிகள் என்று அழைக்கப்படுகிற சபை மக்களாகிய நாம் தேவனுடைய ஜனம் என்ற தெளிவைப் பெற்றிருக்க வேண்டும். தேவன் எதிர்பார்க்கிற நடக்கை நம்மில் காணப்படவேண்டும். அப்படியில்லாமல், நாமும் உலகத்தாரைப் போல் நடந்து கொள்வோமானால் தேவன் நம்மைத் தெரிந்து கொண்டதும் நாம் வேதத்தை அறிந்து கொண்டதும் வீணாகப் போய்விடும்.

வேதத்தில், சமுதாயத்தின் சகல மட்டத்திலும் உள்ள நபர்களுக்கும் வேண்டிய ஆலோசனைகள், தனித் தனியாகவும், பொதுவாகவும் சொல்லப்பட்டுள்ளது. உதாரணமாக, முதலாளிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும். அவர்களிடம் வேலை செய்பவர்கள் எப்படி நடக்க வேண்டும் என்பதெல்லாம் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இன்றைய நாட்களில் ஸ்ட்ரைக் என்ற கலாச்சாரம் பெருகி நன்றாக நடந்து வந்த அநேக நிறுவனங்கள் மூடப்பட்டு வேலை வாய்ப்புகள் குறைந்துள்ளதைக் காண்கிறோம். அதிகாரத்தை எதிர்த்து நிற்பது தேவனால் தடை செய்யப்பட்ட காரியமாகும் (ரோமர் 13:1). இப்படிப்பட்ட ஆலோசனைகள் உலகத்திற்கு பைத்தியமாகவும் எதிர்க்கிற காரியங்கள் நியாயமாகவும் எடுத்துக் கொள்ளப் படுவதால் சமுதாயம் இன்றைக்கு சீர் குலைந்து காணப்படுகிறது. தாய் தகப்பனைக் கனம் பண்ண வேண்டும் என்ற தேவ கட்டளை மீறப்படுவதாலேயே இன்றைக்கு சிறுவர்கள் சீர்திருத்தப் பள்ளிகளும், சிறைத் தண்டனைகளும் பெருகி உள்ளது.

நீயோ தேவனுடைய மனுஷனே (1தீமோ.6:11) என்ற வார்த்தை நம்மை எச்சரித்துப் புத்தி சொல்லுகிறது. தேவன் மோசேயிடம் பேச முற்பட்டபோது அவருடைய மகிமையைக் கண்டு ஜனங்கள் பயந்தார்கள். அதற்குத் தேவன் மோசேயிடம், நீ போய் அவர்களைத் தங்கள் கூடாரங்களுக்கு அனுப்பிவிடு. நீயோ, இங்கே என்னிடத்தில் நில். அவர்களுக்கு போதிக்க

வேண்டியதை சொல்லுவேன் என்றார் (உபா.5:30,31) எனவே தான், சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் விதவைகள் விசாரிக்கப் படவில்லை என்ற குறைபாடு எழுந்த போது அப்போஸ் தலர்கள் அதற்கென்று சிலரை நியமித்தபின் சொல்லுகிறார்கள்,'' நாங்களோ ஜெபம் பண்ணுவதிலும் தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். மேலும், பிற்காலங்களில் சபைகள் பெருகின. பிற்பாடும் கூட, உங்களை நடத்துகிறவர்களை எதிர்க்காமல் கீழ்ப்படிந்து நடவுங்கள் (எபி.13:17) இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரமாக எண்ணுங்கள் (1தீமோ.5:17) என்றும் ஆவியானவர் தொடர்ந்து வலியுறுத்துவதைப் பார்க்கிறோம். ஆகவே, சபை நடத்துகிறவர் களைக் கனம் பண்ணுவதில் ஜாக்கிரதையாய் இருப்போமாக.

நாம் தேவனுடைய கட்டளைகளின்படி செய்ய உண்மையாய்ச் செவிகொடுப்போமானால் தேவன் நம்மை மற்ற ஜனங்களை விட மேன்மையாக வைப்பார் என்பது இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதம் (உபா.28) அப்படி அவர் உன்னை ஆசீர்வதிக்கும்போது நீ அநேகருக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய் என்றார். (உபா. 28:12) நாம் தேவனுக்குப் பயந்து கெட்ட பழகு வழக்கங்களுக்கு விலகியிருக்கும்போது நிச்சியம் தேவன் நம்மை இப்படியாக ஆசீர்வதிப்பார் என்று விசுவாசியுங்கள்.

ஒரு வேளை தவறான பாதையில் சென்று பிரச்சனையில் நீ சிக்கியிருக்கும் போது தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத் துவம் கொடுத்து நீயோ மனந்திரும்புவாயானால் உனக்கு தேவன் மீண்டும் நன்மை உண்டாகச் செய்வார் என்பது நிச்சயமாகும்.

நாம் நம்முடைய பிரச்சனைகளில் மூழ்கி பயந்திருக்கும்போது தேவன் நம்மைப் பார்த்து சொல்லுகிறார். **என் தாசனாகிய இஸ்ரவேலே, நான் தெரிந்து கொண்ட யாக்கோபே, நீ பயப்படாதே உன் மேல் எரிச்சலாயிருக்கிறவர்கள் வெட்கமடைவார்கள், நீயோ கர்த்தருக்குள்ளே களிகூர்ந்து மேன்மை பாராட்டிக் கொண்டிருப்பாய்** (ஏசாயா 41:8-16) ஆகவே, நாம் எல்லாச் சூழ் நிலைகளிலும் நம்முடைய தேவன்மேல் வைக்கும் விசு வாசத்தில் உறுதியாய் இருந்து அவரையே நோக்கிப் பொறுமை யாய் காத்திருப்போம். உங்களுக்காக யுத்தம் செய்கிறவர் அவர் அல்லவா?

பொல்லாதவர்களைக் குறித்து நாம் எரிச்சலாகக் கூடாது. துன்மார்க்கனை நாம் தேவனுடைய வார்த்தையின்படி எச்சரிக்க வேண்டும். அவன் மனந்திரும்பாமற்போனால் தன்

அக்கிரமத்திலே சாவான். நீயோ உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய் என்கிறார் (எபே 33:9) ஆகவே, நாம் தேவனுடைய வார்த்தைகளை மற்றவர்களுக்கு அறிவிப்பதில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். நேபுகாத்நேச்சாரிடம் சொப்பனத்தின் அர்த்தத்தை ஞானிகளும் அறிவிக்கக் கூடாமற் போயிற்று. ராஜா தானியேலிடம் **நீயோ இதைத் தெரிவிக்கக்கடவன், தேவ ஆவி உனக்குள்ளே இருக்கிறதே என்றான்** (தானி.4:18). ஆகவே, நாம்தான் நம்மிடத்தில் விசாரித்துக் கேட்கிறவர்களிடத்தில் மேட்டிமையாக அல்ல, சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் (1பேதுரு 3:15) என்ற கட்டளையைப் பின் பற்ற வேண்டும்.

இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களின் ஆர்ப்பாட்டமான பேச்சுக்களே அவர்களுக்குக் கண்ணியாக அமைந்து விடுகிறது. இந்தியாவை இயேசுவுக்கு சொந்தமாக்குவோம் என்று இவர்கள் கூவுகிறதற்கு பதிலாக மாற்று மதத்தவரும் அதைத் திருப்பி சொல்வதைக் காண்கிறோம். ஆத்துமாக்களை அமைதியாக ஆயத்தப்படுவதே தேவ சித்தமாயிருக்கும். அற்புதம் அடையாளம் என்று வேதத்தை அறியாத கள்ளப் போதகர்கள் செய்யும் ஆர்ப் பாட்டங்களே மற்றவர்களை எரிச்சலூட்டுவதாக அமைந்து விடுகிறது. ஆண்டவர் இதைப் பற்றிக் குறிப்பிடும் போது மாயக் காரரைப் போலிருக்க வேண்டாம். நீயோ ஜெபம் பண்ணும் போது அந்தரங்கத்தில் இருக்கிற பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு என்றும் மனுஷர் காண வேண்டும் என்று ஒன்றையும் செய்யாதிருங்கள் என்றும், நீயோ உபவாசிக்கும் போது முகவாட்டமாய் இராதே என்றும் ஆலோசனை சொல்லியிருக்கிறார். ஆகவே, நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளை பேசு (தீத்து 2:1) என்ற வசனத்தின் படி நாம் நடந்து கொண்டு உலகத்தாரைப் போல் எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிற பண ஆசையை விட்டு விலகி நீதி, தேவபக்தி, விசுவாசம், அன்பு, பொறுமை, சாந்தகுணம் இவைகளை நாடுவோம் (*I* தீமோ.6:11) தேவக்கிருபை நம் மனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ★

---

**பரிசுத்த ஆவியானவர் மூலமாக நாம்**

**ஆக்கினையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறோம்** (ரோமர் 8:1)

**ஒரு போதும் கைவிடப்படமாட்டோம்** (எபி. 13:5)

**நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம்** (ரோமர் 5:1)

**பூரணப்படுத்தப்பட்டிருக்கிறோம்** (எபி.10:14)

# சகல பிரயாசத்தினாலும் பிரயோசனமுண்டு நீதி.14:23

Bro. K. M. பிலிப்

**ம**னிதன் எப்பொழுதும் தனக்காக, தன் குடும்பத்திற்காக சபைக்காக, சமுதாயத்திற்காகப் பிரயாசப்படுகிறான். நல்லது. ஆனால், பிரயாசத்திற்கேற்ற பலன் உண்டா? கிடைத்த பலனை அனுபவிக்க முடிகிறதா? ஆம், எத்தனை ஏமாற்றங்கள், தோல்விகள், கிடைத்தும் பயன்படுத்த முடியாத நிலை. முடிவில் மனமுடைந்து விரக்தியில் மரணத்தைத் தழுவிக் கொள்ளும் நிலையைப் பார்க்கிறோம். **இதைத்தான் சாலமோன் ஞானி, அவன் நாட்களெல்லாம் அலுப்புள்ளது; அவன் வேலைகள் வருத்த முள்ளது; இராத்திரியிலும் அவன் மனதுக்கு இளைப்பாறுதலில்லை,** (பிர2:23) என்றும், மிகப்பெரிய வேலைகளையெல்லாம் நான் செய்த போதிலும், என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லா பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன். எல்லாம் மாயையும், மனதிற்கு சஞ்சல முமாயிருந்தது. சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றும் இல்லை (பிர2:4-11) என்று புலம்புகிறதைப் பார்க்கிறோம்.

அப்படியென்றால், மனிதன் பிரயாசமோ, முயற்சியோ, வேலையோ ஒன்றும் செய்ய வேண்டாமா? அப்படியல்ல. மனிதன் பிரயாசப்பட வேண்டும் (வேலை) என்பது ஆதிமுதல் தேவன் மனிதனுக்குக் கொடுத்த பிரதான போறுப்புகளில் ஒன்று. முதல் மனிதனாகிய ஆதாமை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். ஆதி.2:15). தன் ஜனமாகிய இஸ்ரவேலருக்குக் கொடுத்த 10 கட்டளைகளின் ஊடே **ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக** (யாத் 20:9) என்று கட்டளையிட்டார். **ஏற்பாட்டில் தனிப்பட்ட விசுவாசத்தைக் குறித்து ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது** (11தெச 3:10) என்றும், சபையாருக்கோ, **.... உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்த கைகளினாலே வேலை செய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்,** (1தெச 4:12) என்றும், மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் வேலை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இயேசுவும் கூட மனுஷ குமாரனாய் பிறந்ததால் தன் முப்பது வயது வரை உலகத் தகப்பனோடு சேர்ந்து தச்சு வேலை செய்தார் (மாற்:6:3) முப்பதுக்குமேல், பரத்துக்கேறும்

வரை **அவர் நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்தார்** (அப் 10:36) என்று பார்க்கிறோம். இவைகள் பிரயாசம் (வேலை, முயற்சி) அவசியம் என்பதையே வலியுறுத்துகின்றன. **பிரச்சனை என்னவென்றால், பிரயாசப்பட்டு, பெற்ற பலனை மகிழ்ச்சியோடு பிரயோசனப்படுத்திக் கொள்ள முடிகிறதா? அல்லது கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையா? இங்கு ஞானி, பிரயாசம் எல்லா மாயையும், மனதிற்கு சஞ்சலம் என்றும், சகல பிரயாசத்தினாலும் பிரயோசனமுண்டு** என்றும் இரு எதிர்மறையான கருத்துக்களை கூறுகிறாரே! இது எப்படி?

மனித வாழ்க்கையில் இரண்டும் உண்மையே. ஒன்று **நீங்கள் திரளாய் விதைத்தும் கொஞ்சமாய் அறுத்துக் கொண்டு வருகிறீர்கள்......... கூலியை சம்பாதிக்கிறவன் பொத்தலான பையிலே போடுகிறவனாய் அதை சம்பாதிக்கிறான்,** (ஆகாய் 1:6) என்பதும்; இரண்டாவது **உன் கிரியைக்குத் தக்க பலன் உண்டு; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்** என்பதும் உண்மையே (எரே 31:16). இதில் சகல பிரயாசத்தினாலும் பிரயோசனம் பெற்று அநுபவிக்க நாம் யாரை சார்ந்திருக்க வேண்டும் என்பதே நாம் கற்றுணர வேண்டிய பாடம். இரண்டையும் வாழ்க்கையில் அனுபவித்த அனுபவசாலி ஞானி தெளிவாய் கூறுகிறார்; **நான் திரும்பிக் கொண்டு சூரியனுக்குக் கீழே கண்டதாவது; ஓடுகிறதற்கு வேகமுள்ளவர்களின் வேகமும்.... பிழைப்பதற்கு ஞானமுள்ளவர்களின் ஞானமும் போதாது; ஐசுவரியம் அடைகிறதற்கு புத்திமான்களின் புத்தியும் போதாது..... அவர்களெல்லாருக்கும் சமயமும், தேவச் செயலும் நேரிட வேண்டும்,** (பிர9:11) என்றும், **தேவன் ஐசுவரியத்தையும், சம்பத்தையும் எவனுக்குக் கொடுத்திருக்கிறாரோ, அவன் அதிலே புசிக்கவும், தன் பங்கைப் பெறவும், தன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கவும் அவனுக்கு அதிகாரம் அளிப்பது தேவனுடைய அநுக்கிரகம்** (பிர 5:19) என்பதையும் அநுபவித்துக் கூறுகிறார். மேலும் **உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி, அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்,'' என்கிறார். (நீ.16:3).**

அருமையானவர்களே! விதைக்கிறவர்கள் நாமாக இருந்தாலும், விளையச் செய்கிறவர் தேவன் என்பதை ஒரு போதும் மறந்து விட வேண்டாம். (1கொ3:7). ஒரு சரித்திரத்தை கவனியுங்கள். ராஜா நேபுகாத்நேச்சார், தன் பிரயாசங்களின் பலனைக் குறித்து,'' இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், **என்** மகிமைப் பிரதாபத்திற்கென்று, ராஜ்ஜியத்திற்கு அரண் மனையாக **நான்** கட்டின மகா பாபிலோன் என்றான். அவன் கட்டினது உண்மைதான். ஆனாலும், ராஜா அவற்றை

அனுபவிக்க முடியாதபடி அப்பொழுதே ராஜ்பாரம் அவனை விட்டு **நீங்கி** மனுஷரினின்று தள்ளப்பட்டு, வெளியின் மிருகங்களோடே சஞ்சரித்து, மாடுகளைப்போல புல்லை மேய்ந்தான். [தானி 4:30-33]. அவனது பரிதாப நிலையைப் பாருங்கள்! ஏன் இந்த நிலை? ராஜா, தன் பிரயாசங்களை யெல்லாம் வாய்க்கச் செய்த தேவச் செயலையும், தேவ அநுக் கிரகத்தையும் நாடாமல், தன் சுய பெலத்தின் மீதும், தன் அதிகாரம், ஐசுவரியத்தின்மீதும் தன் நம்பிக்கையை வைத்து பெருமைப்பட்டு, தன்னை உயர்த்தின படியால், பிரயாசத்தின் பலனை அனுபவிக்கக் கூடிய **தேவ அநுக்கிரகத்தை** இழந்து போனான்.

அன்பானவர்களே! **என் சாமர்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரியத்தைச் சம்பாதித்தது என்று என் இருதயத்தில் சொல்லாதே. உன் தேவனாகிய கர்த்தரே! சம்பாதிக்கிறதற்கான பெலனையும், அதை அனுபவிப்பதற்கான அநுக்கிரகத்தையும் அருளுகிறவர்** [உபா 8:17,18]. **ஆம், விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல. இரங்குகிற தேவனாலேயாகும்** [ரோமர் 9:16] என்பதே நம் விசுவாசமாயிருக்கட்டும்.

இப்பொழுது, சகல பிரயாசத்தினாலும் உண்டான பிரயோசத்தை அநுவித்த சில தேவ பிள்ளைகளை நம் முன் நிறுத்தி உற்று நோக்குவோம். ஈசாக்கு; **ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான். கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான்** [ஆதி 26:12]. **கர்த்தர் அவனை ஆசீர்வதித்தினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான்**[ஆதி 26:12]. கர்த்தர் அவனை நூறு மடங்கு ஆசீர்வதிக்க, தேவ அநுக்கிரகம் பெறக் காரணம் ஈசாக்கு தன்னையே பலியாகக் கொடுக்கும் அளவுக்கு தேவ சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்தான் [22:9]. தியானிக்கிறவனாக, ஜெபிக்கிறவனாக, தேவனைச் சார்ந்து விட்டுக் கொடுக்கிற வனாக வாழ்ந்தான் என்பதேயாகும். [24:21;26:15.32].

நெகேமியா:- இடிந்துபோன எருசலேமின் அலங்கத்தின் மதில்களைக் கட்டி எழுப்ப தனிமனிதனாக எழுந்து சகல பிரயாசங்களையும் மேற்கொண்டான். அதற்கு ராஜாவின் அனுமதியும், உதவிகளும், சொந்த மக்களின் பூரண ஆதரவும், உழைப்பும் கிடைத்தது. அநேக எதிர்ப்புகளுக்கிடையே திட்டமிட்டபடி அலங்கத்தை 52 நாட்களில் கட்டிமுடித்தான். [நெகேமியா. 1-6]. இதற்காக நெகேமியா ஒவ்வொரு பிரயாசத்திற்கு முன், தேவனுடைய அநுக்கிரகத்தைப் பெற ஜெபித்தான். [நெகேமியா.1:4-10;

2:4;14). இதை அநுபவமாகக் கூறுகிறதை கவனியுங்கள்:– என் தேவனுடைய கரம் என்மேல் இருந்தது; அது நன்மையாக இருந்தது; பரலோகத் தேவன் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடி வரப்பண்ணுவார்; இந்தக் கிரியை எங்கள் தேவனால் கைகூடி வந்தது (2:8, 18, 20; 6:16). ஆம், முற்றிலும் தேவனைச் சார்ந்திருந்த நெகேமியாவின் சகல பிரயாசங்களுக்கும் பிரயோசனமுண்டாயிற்று.

புதிய ஏற்பாட்டில் (லூக்கா 5:1–11) சீமோன் பேதுருவும், கூட்டாளிகளும் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் மீன்கள் ஒன்றும் அகப்படாத நிலையில், இயேசுவின் சொற்படி வலைகளைப் போட்டதால் இரண்டு படகுகள் நிரம்பத்தக்க மீன்களை பிடித்தார்கள். ஆம், அதே படகு, அதே கடல், அதே ஆட்கள்தான். ஆனால், இப்பொழுது இயேசுவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்ததால் இயேசுவின் அநுக்கிரகம் கிடைத்தது **சகல பிரயாசத்தினாலும், உண்டான பிரயோசனத்தை நிறைவாய் பெற்றார்கள்.**

அன்பானவர்களே! சகல பிரயாசமிருந்தும், பிரயோசனம் **உண்டாகவில்லை** என்ற நிலை மாறி, **உண்டு** என்ற தேவ வாக்கு நம்மில் நிறைவேறட்டும். நம் வாழ்க்கை செழித்திருக்க தேவன் தாமே அநுக்கிரகம் செய்வாராக. ஆமென். ★

## நாளும் நடப்பும்

- ❉ இந்தக் கல்வி ஆண்டில் 2019 - 2020, 5,8-ம் வகுப்புகளுக்கு பொதுத்தேர்வு – மாநில அரசு
- ❉ தமிழகத்தில் தீ விபத்துக்களின் எண்ணிக்கை 7.41% அதிகரிப்பு – தீயணைப்புத்துறை
- ❉ 1200 சதுர அடிக்குள் கட்டப்படும் குடியிருப்புகளுக்கு இணையதளம் வாயிலாக அனுமதி – அமைச்சர்
- ❉ இணையத்தில் செப்டம்பர் 1 – முதல் வாக்காளர் பட்டியலை வாக்காளர்களே திருத்தலாம் – தலைமை தேர்தல் அதிகாரி.
- ❉ 2021 - 2022 – க்குள் 75 புதிய மருத்துவக் கல்லூரிகள் – நடுவண் அமைச்சரவை
- ❉ தமிழகத்தில் விரைவில் ஹெலிகாப்டர் ஆம்புலன்ஸ் வசதி – மாநில அரசு
- ❉ பொதுத்துறை வங்கிகள் இனி 12 மட்டுமே – மத்திய நிதியமைச்சர்